DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**CP** 83/2022

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | PW1 |
| NAME | D. ஜெகதீஸ் |
| FATHER NAME | தாமோதரசாமி |
| ADDRESS | 41/2, ராமசந்திர நகர், No. 4, வீரபாண்டிய புதூர், கோவை 19. |
| AGE | 58 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.16.02.2026

**முதல் விசாரணை –**

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1989 முதல் பணியாற்றி வந்தேன். என்னையும், மற்ற தொழிலாளர்களையும் எதிர்மனுதாரர் 11.02.2019 ம் தேதியிட்டு பணிநீக்கம் செய்ததது செல்லாது என்பதன் அடிப்படையில் இந்த கணக்கீட்டு மனுவில் பரிகாரம் கோரினேன். தற்போது எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே தொழிற்சங்கம் மூலம் 30.01.2026 தேதியில் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டு சமரசம் ஆகிவிட்டோம். எனக்குண்டான தொகையை முழுமையும் இறுதியுமாக பெற்றுகொண்டு விட்டோம். கணக்கீட்டு மனுவை

வலியுறுத்தாமல் வாபஸ் பெற்று கொண்டு, குறிப்புரை தாக்கல் செய்கிறேன். அந்த குறிப்புரை Ex P1.

குறுக்குவிசாரணை

கணக்கீட்டு மனுவில் கோரிக்கைக்கு நிர்வாகம் எதிர்நிலைப்பாடு எடுத்து வழக்கு நடத்தியது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் தொழிற்சங்கம் மூலம் அணுகி ஒப்பந்தம் ஏற்படுத்தி எதிர்மனுதாரர்க்கு எதிரான அனைத்து கோரிக்கையும் கைவிட்டு கணக்கை முடித்து தொகைகள் பெற்று கொண்டேன். எனக்கு இனி எந்த பரிகாரமும் எதிர்மனுதாரரிடம் இருந்து எந்த வகையிலும் வர வேண்டியதில்லை. எனது மனு தள்ளுபடி செய்யப்படலாம் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.